உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந் திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர். 2 Vol. 2	ஈசுவர வருஷ வைகாசிமீ 1உ மே—1937	இதழ் 2 No. 2

திருப்புகழ்.

திருச்செந்தூர்

முந்துதமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி
யுழலாதே

முந்தைவினை யேவ ராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத் தேக
முந்தடிமை யேனை யாளத் தானு
முனைமீதே

திந்திதிமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தான
செஞ்செணகு சேகு தாளத் தோடு
நடமாடுஞ்

செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்க அநுகூல பார்வைத் தீர
செம்பொன்மயில் மீதி லேயெப் போது
வருவாயே

அந்தண்மறை வேள்வி காவற் கார
செந்தமிழ்சொல் பாவின் மாலைக் கார
அண்டருப கார சேவற் கார
முடிமேலே

அஞ்சலிசெய் வோர்கள் நேயக் கார
குன்றுருவ ஏவும் வேலைக் கார
அந்தம்வெகு வான ரூபக் கார
எழிலான

சிந்துரமின் மேவு போகக் கார
விந்தைகுற மாது வேளைக் கார
செஞ்சொலடி யார்கள் வாரக் கார
எதிரான

செஞ்சமரை மாயு மாயக் கார
துங்கரண சூர சூறைக் கார
செந்தில்நகர் வாழு மாண்மைக் கார
பெருமாளே.

பதவுரை.

அந்தண்-அழகிய குளிர்ந்த சிந்தையுடையவர்களால், மறை வேள்வி - வேதவிதிப்படி செய்யும் யாகங்களுக்கு, காவல்கார -இடையூறு நேராவண்ணம காவல்புரியும் காவல்காரரே !, செந்தமிழ் - செவ்வையான தமிழ்மொழியாலாகிய, சொல்பாவின் - புகழ்ப் பாக்களாலாகிய பிரபந்தங்களே, மாலைக்கார - மாலையாகத் தரித்துக்கொள்பவரே ! அண்டர் உபகார - தேவர்களுக்கு (சூரபன்மனுலேற்பட்ட சிறையை நீக்கி) உபகரித்தவரே ! சேவல்கார - சேவற்கொடியைக் கரத்தில் தாங்கியவரே !, முடிமேல் அஞ்சலி செய்வோர்கள் - சென்னியின்மேல் செங்கரங்களைக் குவித்து வணங்குகிற அடியார்களுக்கு, நேயக்கார - சிநேகராக விளங்குபவரே !, குன்று உருவ ஏவும் . கிரௌஞ்ச மலையை ஊடுருவிச் சென்று பிளக்குமாறு செலுத்திய, வேலைக்கார - ஞானசக்தியாகிய வேலாயுதத்தையுடையவரே !, அந்தம் வெகுவான - மிகுந்த அழகுடைய, ரூபக்கார - திருமேனியைக் கொண்டவரே !, எழில் ஆன - அழகு மிகுந்த, சிந்தூர மின் மேவு - தேவயானையின் மகளாகிய தேவகுஞ்சரியம்மையார் விரும்பு

கின்ற, போகக்கார - சிவ போகத்தையுடையவரே!, விந்தை குற மாது - அற்புதமடையத்தக்க அரிய குணங்களையுடைய குறமகளாகிய வள்ளிநாயகியாருடன், வேளைக்கார - பொழுதைப் போக்குபவரே!, செஞ்சொல் - செவ்வையான சொற்களையுடைய, அடியார்கள் - அடியவர்களிடத்து, வாரக்கார - அன்புடையவரே!, எதிர் ஆன - போர்க்களத்தில் எதிர்த்துவந்த, செஞ்சமரை - உதிரப்பெருக்கத் தால் சிவந்த அசுரர்களின் யுத்தத்தை, மாயும் மாயக்கார - இமைப் பொழுதில் மாயக்காரன்போல் மாய்த்தவரே!, துங்க ரண சூர - பரிசுத்தமான போர்வீரனாகிய சூரபன்மனை, சூறைக்கார - சண்ட மாருதம்போல் அழித்தவரே!, செந்தில் நகர் வாழும் - திருச்செந்தூர் என்னும் திருத்தலத்தில் வசிக்கின்ற, ஆண்மைக்கார ஆண்மை (திடம்) யை உடையவரே!, பெருமாளே - பெருமையிற் சிறந்த வரே!, முந்து தமிழ் மாலை - பழமையான தமிழ்மொழியால், கோடி கோடி - கோடிக்கணக்கான கவிகளை, சந்தமொடு - சந்தத்தோடு, நீடு பாடி பாடி - நீளமாகப் பாடிப்பாடி, முஞ்சர் - இறந்துபோகின்ற கீழ்மக்களுடைய, மனைவாசல் தேடி தேடி - வீட்டுவாசலைத் தேடித் தேடி, உழலாது - (ஏ-அசை) பொருள் விருப்பத்தால் உழன்று அலையாவண்ணமும், முந்தைவினை (ஏ-பிரிநிலை) பிறவிகள்தோறும் புரிந்து பக்குவத்திற்கு வாராத சஞ்சித வினைகள், வராமல் போக - அடியேனைத் தொடர்ந்துவந்து துன்புறுத்தாமல் விலகிப்போகவும், மங்கையர்கள் காதல் - பெண்கள்மீதுள்ள ஆசையானது, தூரத்து ஏக - அடியேனைவிட்டு மிகுந்த தூரத்தில் ஓடிப்போகவும், முந்து அடிமையேனை - வழிவழி அடிமைப்பட்ட பழமையான தொண்ட னாகிய அடியேனை, ஆள (தான் உம்-அசைகள்) -ஆட்கொள்வதற்காக, முனைமீது (ஏ-அசை) - போர்க்களத்தினிடம், திந்திதிமி தோதி . . செஞ்செணகு சேகு - என்ற, தாளத்தோடு - தாளவரிசையுடன், நடமாடும் - நடனம் செய்கின்றதும், செம் சிறிய கால் - செவ்வை யான சிறிய கால்களையுடையதும், விசாலதோகை - விசாலமான தோகையை யுடையதும், துங்க அநுகூல பார்வை - விக்கினமில்லா மையை யுண்டுபண்ணுகின்ற பரிசுத்தமான அருட்பார்வையையுடை யதும், தீர - தைரியமுடையதும், செம்பொன் - சிவந்த பொன்னைப் போல் ஒளி செய்வதுமாகிய; மயில்மீதில் (ஏ-அசை) - மயில்வாகனத் தின்மீது ஊர்ந்து, எப்போது வருவாய் (ஏ-அசை) எந்தச் சமயத்தில் வந்தருள்வீர்?

பொழிப்புரை.

அந்தணர்களால் வேதவிதிப்படி புரியும் வேள்விகளுக்கு இன்னல் நேராவண்ணம் காவல் புரிபவரே!, செந்தமிழாலாகிய புகழ்ப்பாவினங்களை மாலையாகத் தரித்துக்கொள்பவரே! தேவர்களுக்கு அசுரரா லேற்பட்ட சிறைத்துன்பத்தை நீக்கி உதவி செய்தவரே! சேவற் கொடியைக் கரத்திலேந்தியவரே! சென்னிமேற் கரங்களைக் கூப்பி அஞ்சலி அஸ்தராகநின்று அன்புடன் வந்தனஞ்செய்வோர்களது சிநேகிதரே! (தாரகனுக்குத்துணைசெய்து மாயைக்கிருப்பிடமாயிருந்த) கிரௌஞ்சமலையை ஊடுருவிச்சென்று பிளந்தழிக்குமாறு செலுத்திய வேற்படையை யுடையவரே! சிறந்தஎழிலுடைய இன்பவடிவினரே! அழகு மிகுந்த தேவயானையம்மையார் விரும்புகின்ற சிவபோகத்தை யுடையவரே! அதிசயமுறத்தக்க அருங்குணங்களையுடைய குறவர் குலக்கொழுந்தாகிய வள்ளிநாயகியாருடன் பொழுதுபோக்குபவரே! செவ்வையான சொற்களையுடைய அடியார்களிடத்தில் அன்புடையவரே! எதிர்த்துவந்த உதிரத்தால் சிவந்த அசுரர்களை ஒரு கணப் பொழுதிற்குள் மாயக்காரன்போல் மாய்த்தவரே! பரிசுத்தமான போர்வீரனாகிய சூரபன்மனை சுழல்மாருதம்போல் அழித்தவரே! திருச் செந்திலம்பதியில் வாழ்கின்ற ஆண்மையை யுடையவரே! பெருமையிற் சிறந்தவரே! பழமையான தமிழ்மொழியால் கவி மாலைகளை சந்தத்தோடு நீளமாகக் கோடிகோடியாக எந்நேரமும் பாடிக்கொண்டு, அழிந்துபோகின்ற மனிதர்களின் வீட்டுவாசல் தோறும் அவர்களைத் தேடிக்கொண்டு உழன்று அவமே அலையா வண்ணமும், பிறவிகள்தோறும் புரிந்த பழைய வினைகளாகிய சஞ்சித வினை என்னைவந்து தொடராமல் விலகிப்போகவும், பெண்கள்மீதுள்ள ஆசைப்பெருக்கமானது அடியேனைவிட்டு நெடுந்தூரத்தில் ஓடிப்போக வும், வழிவழியாக அடிமைப்பட்ட பழய தொண்டனாகிய அடியேனை ஆட்கொள்ளுமாறு, போர்க்களத்தில் திந்திதிமிதோதி தீதித்திதி தந்தத்தன தான தானத் தான செஞ்செணகு சேகு என்ற தாளவரி சைகளுடன் நடனமிடுவதும், செவ்வையான சிறிய பாதமும் விசால மான தோகையும், அநுகூலத்தைச் செய்யும் தூய்மையான பார் வையும் தைரியமும் உடையதும், செம்பொன்போன்ற பிரகாசத்தை யுடையதுமாகிய மயில்வாகனத்தின்மீது எக்காலத்தில் வந்து திரு வருள் புரிவீர்?

விரிவுரை.

முந்து தமிழ் :—

வடமொழிக்கும் தென்மொழிக்கும் ஆசிரியர் சிவபெருமானே யாவர். வடமொழியைப் பாணினிக்கும், தென்மொழியை அகத்தி யருக்கும் சிவபெருமான் உபதேசித்தனர். சிவபெருமான் இந்த இரு மொழிகளின் வடிவமாக விளங்குகிறார்.

"ஆரியமுஞ் செந்தமிழும் ஆனான்காண்"

— தமிழ்மறை

இந்த இரு மொழிகளில் ஆரியம் உலகவழக்கினின்றும் ஒழிந் தது. செந்தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகளாக இளமையாகவே செழித்தோங்கியுளது. முச்சங்கத்திலும் நின்று நிலவியது. சாக்ஷாத் சிவபெருமானே மதுரையில் புலவர் குழாங்களில் தாமும் ஒருவராக இருந்து ஆராய்ந்த தனிச்சிறப்புடைத்து. நேற்று தோன்றி இன்று மறையும் ஏனைய மொழிகள்போலல்லாது எக்காலத்தும் எழில் குன் றாமல் இனிமை பயப்பது இத்தமிழ்மொழியே யாகும். சிவபெரு மானே இதற்கு ஆசிரியாதலால் தொன்மை யுடைத்து. எல்லா மொழிகளுக்கும் முதன்மையுடைத்து எனினும் அமையும்.

முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி உழலாதே :—

இத்தகைய அரிய தமிழைப்பயின்று அம்மொழிக்குத் தலைவரு கிய இறைவனைப்பாடி அதன் பயனைப்பெறாது, பொருள் விருப்பத் தால் இன்றிருந்து நாளையிறக்கும் மனிதர்கள் வீடுதோறும் சென்று கொடாதவனைப் பாரிகாரி என்றும், குணமில்லாத கீழ்மகனை தரும புத்திரனுக்கு நிகரானவனென்றும், சிறிதும் வலியற்றவனை விஜய னென்றும் வறிதே புகழ்ந்து வாழ்நாளையும் கல்வியறிவையும் கமரிற் கவிழ்த்த காமதேனுவின் பாலாக வீணாக்குகின்றனர்.

மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே
வில்லுக் கிவனென்று
கொடுக்கிலா தானைப் பாரியே யென்று
கூறினுங் கொடுப்பாரிலை
பொடிக்கொள் மேனியெம் புண்ணியன்
புகலூரைப் பாடுமின் புலவோர்காள்

அடுக்குமேல் அமருலகம் ஆள்வதற் கியாது
மையுற வில்லையே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

" வஞ்சக லோப மூடர் தம்பொரு ளூர்கள் தேடி
மஞ்சரி கோவை தூது பலபாவின்
வண்புகழ் பாரிகாரி எனறிசை வாது கூறி
வந்தியாபோல வீணி லழியாதே "

—திருப்புகழ்.

மூந்தை வினை:—

பிறவிகள்தோறும் மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் புரிந்த வினைகளானது மலைபோற் குவிந்து அனுபவித்தற்குரிய பக்குவப்படாது குவிந்துள. அவைகட்கு சஞ்சிதமெனப் பெயர். அவற்றை இறைவன் திருவருளாலேயே ஒழித்தல்வேண்டும். அந்த வினைகள் அழிந்துபோகும்வண்ணம் குமாரநாயகனை விரும்பி அழைக்கின்றார். வேலாயுதத்தையுடைய வீரன் அப்பெருமானே யாவர். வினைகளை அழிக்கவல்லது வேற்படை யொன்றேயாம். வினைகளழியவேண்டுமாயின் வேற்படையைத்தாங்கிய விமலனை வழிபட வேண்டும். வினைகளை அழிக்க வல்லது வேற்படையென்பதை அடியில் வரும் வாக்குகள் வலியுறுத்துமாறு காண்க.

" நீசர்கள்த மோடெனது தீவினையெலா மடிய
நீடுதனி வேல்விடு மடங்கல் வேலா "

—(ஆறுமுகம்) திருப்புகழ்.

" வினையோட விடுங்கதிர வேல் "

—கந்தரனுபூதி.

மங்கையர்கள் காதல் தூரத்தேக :—

பொன்னாசையும் மண்ணாசையும் மனிதப்பிறவிக்கேயுள. பெண்ணாசை ஒன்றே எல்லாப் பிறவிகளுக்கும் உண்டு. எனவே பிறவிகள்தோறும் தொடர்ந்துவருவதாகிய பெண்ணாசையை இறைவன் திருவருளாலன்றி ஒழிக்கமுடியாது இதுவேயுமன்றி அவ்வாசை மிகவும் வலியுடையதாதலால் சிறிது அருகிலிருந்தாலும் உயிரை வந்து பற்றி மயக்கத்தைச் செய்யும ஆதலால் இம்மாதராசை மிகமிகத் தூரத்திலே யகலவேண்டும்.

கள்ளானது குடித்தாலன்றி மயக்கத்தை யுண்டுபண்ணாது. காமமோ கண்டாலும் நினைத்தாலும் மயக்கத்தை யுண்டுபண்ணும். ஆதலால் இப்பெண்ணாசையைப்போல் மயக்கத்தைத் தரும் வலியுடைய பொருள் வேறொன்றும் இல்லை. இதனை அடியில்வரும் வடமொழி தென்மொழி மறைகளாற் கண்டு தெளிக.

மாத்யதீ ப்ரமதாம் த்ருஷ்ட்வா ஸுராம் பீத்வாசமாத்யதீ!
தஸ்மாத் த்ருஷ்டி விஷாம்நாரீ தூரத: பரிவாஜயேத||

—நாரதபரிவ்ராஜகம்.

உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

—பொதுமறை.

தீயைக்காட்டிலும் காமத் தீ கொடியது; தீயில் விழுந்தாலும் உய்வு பெறலாம் ; காமத்தீயில் விழுந்தார்க்கு உய்வு இல்லை ; தீயானது உடம்பைமட்டும் சுடும் ; காமத்தீ உடம்பையும் உயிரையும் உள்ளத்தையும் சுடும். அன்றியும் அணுகமுடியாத வெப்பமுடைய அக்கினிவந்து சூழ்ந்துகொண்டால் நீருள் மூழ்கி அத்தீயினாலுண்டாகும் துன்பத்தை நீக்கிக்கொள்ளலாம். காமத்தீயானது நீருள் மூழ்கினாலும் சுடும் ; மலைமேல் ஏறி ஒளித்துக்கொண்டாலும் சுடும்.

ஊருள் ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகும் — நீருள்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினுங் காமஞ் சுடும்.

—நாலடியார்.

தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற் சுட லாற்றுமோ தீ.

—திருக்குறள்.

தீயானது தொட்டால்தான் சுடும் ; காமத்தீயானது நினைத்தாலும் சுடும் ; கேட்டாலும் சுடும்; இது வேண்டாமென்று தள்ளினாலும் ஓடிவந்து சுடும் ; இதுவேயுமன்றி நஞ்சை யருந்தினால்தான் கொல்லும்; இக்காமமாகிய விஷம பார்த்தாலும் நினைத்தாலும் கொல்லுந்தகையது. ஆதலால் காமமானது விஷத்தைக்காட்டிலும், கள்

னைக்காட்டிலும், தீயைக்காட்டிலும், ஏனைய கொல்லும் பொருள்களைக்காட்டிலும் மிகவும் கொடியது.

உள்ளினுஞ் சுட்டிடு முணருங் கேள்வியிற்
கொள்ளினுஞ் சுட்டிடுங் குறுகி மற்றதைத்
தள்ளினுஞ் சுட்டிடுந் தன்மை யீதினாற்
கள்ளினுங் கொடியது காமத் தீயதே.

நெஞ்சினு நினைப்பரோ நினைந்து ளார்தமை
எஞ்சிய துயரிடை யீண்டை யுய்த்துமேல்
விஞ்சிய பவக்கடல் வீழ்த்து மாதலால்
நஞ்சினுந் தீயது நலமில் காமமே.

—*கந்தபுராணம்.*

முந்தடிமையேனை :—

அருணகிரிநாத சுவாமிகள் வழிவழியாக முருகனிடத்தில் அடிமைத்திறம் பூண்டவர். இதனை அடியில் வரும் திருப்புகழ் வாக்குகள் வலியுறுத்துமாறு காண்க.

"பழைய நினது வழியடிமையும் விளங்கும் படிக்கினி
துணாத்தி யருள்வாயே"

"விராலி மலையில் விளங்கிய கந்த என்றுனை
மகிழ் வொடு வந்திசெய் மைந்த னெனறெனை
வழிவழி யன்புசெய் தொண்டு கொண்டருள்
பெருமாளே"

"தஞ்ச மாகியே வழிவழி யருள்பெறும்
அன்பினா லுன தடிபுக ழடிமை."

"திந்தி திமிதோதி . . . . நடமாடும்"

மயிலினது நடனத்தின் சிறப்பை வர்ணிக்கின்றனர். குமாரக் கடவுள் ஊர்ந்துவரும் பசும்பொன் மயில், சக்ரவாளகிரி கிழிபடவும், கிரௌஞ்சசைலம் பிளக்கவும், மகாமேருகிரியும் அஷ்டகுலாசலங்களும் உலகங்களும் குலுங்கவும், ஆதிசேடனது ஆயிரம்பணாமகுடங்களும் அதிரவும், சூரபன்மன்முதலிய அவுணர்கள் திடுக்கிட்டு நடுநடுங்கவும், நடிக்கின்ற திறத்தை அருணகிரியாரேயன்றி மற்றுயாரே புகழவல்லார்.

"சக்ரப்ரசண்டகிரி முட்டக்கிழிந்துவெளி
பட்டுக்ரவுஞ்ச சயிலந்
தகரப் பெருங்கனக சிகரச் சிலம்புமெழு
தனிவெற்பு மம்புவியுமெண்
டிக்குத் தடங்குவடு மொக்கக் குலுங்கவரு
சித்ரப்பதம் பெயரவே
சேடன்முடி திண்டாட ஆடல்புரிவெஞ்சூரர்
திடுக்கிடநடிக்கு மயிலாம்."

—மயில்விருத்தம்.

அந்தண்மறை வேள்வி காவற்கார :—

அந்தண் என்பதை யாகத்திற்கு அடைமொழியாகக்கொண்டு அழகியதும் குளிர்ந்ததுமாகிய யாகமென்பாரும் உளர்.

வேதவிதிப்படி அந்தணர்களால் நியமத்துடன் புரியும் யாகத்திற்கு முருகப்பெருமான் காவல்காரராகஇருந்து இடையூறுகளை நீக்கி இன்பத்தை நல்குகின்றனர்.

யாக ரக்ஷக வரலாறு

காசிபமுனிவர்க்கு அதிதியென்னும் பத்தினியிடந் தோன்றியவர்கள் ஆதித்யர் என்னும் தேவர்கள். திதியென்னும் பத்தினியிடம் தோன்றியவர்கள் தைத்தியர்கள். திதி மைந்தர்களாகிய அசுரர்களுக்கும் சுரர்களுக்கும் போர்தொடங்கி இருதிறத்திலும் பலர் மடிந்தனர். தேவர் வேண்டுகோளுக்கிணங்கி திருமால் பாற்கடல் கடைந்து அமிர்தத்தைத் தேவர்களுக்கீந்து, அசுரகுலத்தை அடியோடு அழித்தனர். அஃதறிந்த திதியென்பாள் மிகவும் மனம்வருந்தி, காசிபரிடம்வந்து தன் குலநாசத்தைக்கூறி "நாயக! என் சந்ததி வளருமாறு ஓர் புதல்வனைத் தந்தருள்வீர்" என்று முறையிட்டனள். காசிபமுனிவர் "அன்புள்ளவளே! அஞ்சற்க; நின் அவாவின்படி குலவிருத்தி செய்ய ஓர் புதல்வனைத் தருகின்றேம்' என்று அருளுரைகூறி, குமாரக்கடவுள் வீற்றிருந்தருள்கின்ற திருத்தலங்கள் அறுபத்து நான்கனுள் ஒன்றாய புத்திரகாமம் என்னும் புனிதக்ஷேத்திரத்தையடைந்து, ஆங்கோர் தூய இடத்தில் சால்யோத்தாரணம், தாரைசுத்திமுதலியவைகளுஞ்செய்து யாகசாலை வகுக்கத் தொடங்கினர். மனுசூத்திரம், இரவி சூத்திரம், மூனி சூத்திரம், மானவ சூத்திரம்,

திரபாகமண்டபம் என்னும் ஐவகைப்படும் யாகசாலைகளுக்குள் தங் கருமத்திற்குரிய யாகசாலை மானவகுத்திரமாதலின் அதனைவகுத்து, வேதிகை, ஊர்த்வபட்டி, அதோபட்டி, துவாரம், குண்டலங்கள் இவை கற்பித்து, வேதியின் நடுவிலே பிரமபதமெனவும், நாற்புறத் திலும் தெய்வபதம், மானுடபதம், பைசாசபதம், இராக்கதபதம் என் னும் பதங்களும், அவைகளில் ஊர்த்துவமேகலை, அதோமேகலை, மத்திய மேகலை இவைகளும் கற்பித்துக் குண்டயோனி முதலியவை யும் வகுத்தார். மேலும் யாகசாலைக்குரியனவெல்லாம் செய்து, மறை முறைப்படி சிவாகம மந்திரங்களைக்கூறிச் செய்வாராயினார்.

"அந்த யாக முற்றுமேல் திதியென்பாள் வயிற்றில் கருப்ப முண்டாகும்; அங்ஙனமுண்டாயின் நமக்கும் நம் குலத்தார்க்கும் அழிவு நேரிடும்" என்று தேவர்கோமானும் திருமாலும் இடையூறு களை யியற்றத்தொடங்கினார்

காசிபர் அஃதுணர்ந்து வேள்விப்பதியாகிய வேற்கரத்தண்ணலை வேண்டுவாராயினர்.

யாவனங்கி வடிவானோன்
யாவனயத்தை யூர்ந்திடுவான்
யாவனங்கி பூவெனமஞ்
மறைகளியம்பு மகபலத்தை
யாவன்கொடுக்கும் பொறியாகத்
தோன்று மெழிலோன்முக்கண்ணன்
யாவனவன்றன் பதமலர்க்கிங்
கடியேன் சரணம் புகநின்றேன்

யாவன் அக்கினிவடிவாயிருப்போன்; எவன் மேடவாகனத்தை யூர்வோன்; அம்மூர்த்தி அடியேனையும் யாகத்தையும் காத்தருள்க. 'சிவாக்கினிபூ' என்று வேதங்கள் முழங்கும் பொருளாயிருப்பவன் எவன்? யாகபலப்ரதான மூர்த்தி யாவன்? ஊர்த்வரேதசனும் அறு திசைகளைக் காப்பவனும் யாவன்? குமாரன் திரியம்பகன் யாவன்? அக்கடவுள் அடியேனையும் யாகத்தையும் காத்தருளும்படி அடைக் கலம் புகநின்றேன். யாகத்திலே மும்முறை "சுப்ரமண்யோம்! சுப்ரமண்யோம்!! சுப்ரமண்யோம்!!! என்று வேதங்களால் அழைக் கப்பெறும் ஆறுமுகப்பரம்பொருளுக்கு அடைக்கலம் என்று இவ் வாறு துதித்தார்.

இவ்வொலிகேட்டதும் சேய்குரல்கேட்ட தாய்போல் தண்ணருள் சுரந்து தனிவேற்பரமன் பாலவடிவத்துடன் வேலாயுதமும் பல்லவமுந்தரித்த திருக்கரத்தினராய்த்தோன்றி, "அருந்தவத்தோய்! அஞ்சற்க, யாங்காத்தருள்புரிகின்றோம்; யாகத்தை முடிக்குதி" என்றருளினார். காசிபமுனிவர் கந்த சகத்திரநாமத்தால் அர்ச்சித்துச் சோடச ரூபதியானஞ்செய்து யாகம் புரிவாராயினார்.

தேவர்கள்புரியும் அபிசாரவேள்வியினின்றுந்தோன்றி, மலையன், மாரன் என்னும் அசுரர் இருவரனுப்பப்பட்டார். அவ்வசுரர்கள் முனிவரையும யாகப்பொருள்களையும் விழுங்கவேண்டுமென்று ஆரவாரித்து நெருங்கினார்கள். காசிபா பயந்து, ஞானசத்திதரா! பாலரூபா! பராஞ்சுடரே! ஓலம ஓலம்" என்று துதித்தனர். அதுகேட்ட என்றுமகலாத இளமைக்கார எந்தையார் தங்காததிருந்த பல்லவத்தால் அவ்வசுரர் இருவரையும் கொன்று யாகத்தைக் காத்தருளினார். முனிவர் யாகத்தை நிறைவேறறி, ஆங்கு முருகவேளை பிரதிட்டை செய்தனர். அதுவே புத்திரப்பேற்றை யளிததகால் புத்திரகாமம் என்னும் பெயர் பெற்றது.

வரனயன் சுதன்றன் மனையருட்டிதிதன்
வமிசத்தை யழித்தமாயவனை
எரிசதக் கிருதை யழிசுதற் றருகேன்
றிரக்கவோர் வேள்வியை யியற்ற
வரியிருவருஞ் செயல்வறை தீர
வந்தடர் மாரனார் மலையார்
பரிவுற வழித்துக் காத்தனன் வேலிப்
பதிபுத்ர காமநற் றலமே

இன்னணம் எம்பெருமான் அந்தணர்கள் மறைமுறை வழாது புரியும் யாகங்களை காத்தருள் புரிவதை நக்கீரதேவரும் கூறுமாறு காண்க.

"மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே ஒருமுகம்"
—திருமுருகாற்றுப்படை.

செந்தமிழ் சொல்பாவின் மாலைக்கார :—

செந்தமிழ்ப் பாமாசிரியனும் செவ்வேட்பரமன் அடியார்களால் அணியப்படும் செந்தமிழ்ப் பாமாலைகளை அன்புடன் தரித்துக்கொள்ளுகிறார்.

" விரித்தருணை கிரிநாத னுரைத்ததமி ழெனுமாலை
மிகுத்த பலமுடனோதி மகிழ்வோனே"
—(வரிககலை) திருப்புகழ்.

அண்டருபகார :—

அண்டர் - தேவர், உபகாரன் - உபகரித்தவன். சூரபன்மனால் சிறைப்பட்டு நூற்றெட்டு யுகங்களாக மிகவும் வருந்தி இனி உய்வு பெறுவேமோ என்று ஏங்கியிருந்த தேவர்களுடைய சிறையைமீட்டு, பொன்னாடு தந்து இன்பவாழ்வில் இருக்கவைத்தவர் நம் குமார மூர்த்தியே யாதலால் தேவசகாயனானார்.

சேவற்கார :—

பக்தர்கள் இடையூருற்று முறையிட்டகாலத்தில் முருகப்பெருமான் தான்வரும் குறிப்பை முன்னரே ஒலியால் புலப்படுத்தும் சேவற்கொடியைக் கரத்தில் தாங்கிக்கொண்டுவருவார். இதனை நம் அருணகிரியார் பிறிதோரிடத்தில் "முருகா! நான் கந்தா என்று அழைக்கும்போது தாங்கள் சிவந்த சேவற்கொடியைக் கரத்திலேந்தியவண்ணம் வரவேணும்" என்பதை உற்றுநோக்கி உள்ளம் மகிழ்க

" சென்றே யிடங்கோள் கந்தாயெனும்போ
செஞ் சேவல்கொண்டு வரவேணும்."
—(அன்பாக) திருப்புகழ்.

சிறைப்பட்டிருந்த இந்திர குமாரனாகிய சயந்தனுடைய கனவில் அறுமுகனார் அருள் புரிந்தபோது கோழிக்கொடியுடன் சென்றார் என்ற அச்சரிதையை விரித்தோதும் முதல்வன் புராணத்துள் கண்டு தெளிக.

ஆரணம் பயில் ஞான புங்கவ
சேவலங் கோடி யான பைங்கரா
ஆவினனகுடி வாழ்வுகொண்டருள் பெருமாளே.
—(மூலமந்) திருப்புகழ்.

முடிமேலே அஞ்சலிசெய்வோர்கள் நேயக்கார :—

இறைவனை வழிபாடு செய்யுங்கால் கரங்களை சிரங்களுக்குமேல் பன்னிரண்டங்குலம் உயரக்கூப்பி வணங்கவேண்டும், அங்ஙனம் அன்புடன் அஞ்சலியஸ்தராக நின்று வழிபாடு செய்வோர்களுக்கு தேவர்களுங் காணவொண்ணாத தேவ தேவனும் திருமுருகேசன் நேயக்காரனாக எளிதில் இரங்கி இன்னருள் புரிகிறான்.

குன்றுருவ ஏவும் வேலைக்கார :—

இதன் விரிவை திருப்புகழமிர்தம் முதலாவதாண்டு மலர் 1, 36-ம் பக்கத்திற் காண்க.

அந்தம் வெகுவான ரூபக்கார :—

முருகனே முழுதுமழகிய முதல்வன் என்பதை முருகன் பெருமை என்ற கட்டுரையில் விரித்து எழுதியுள்ளோம். திருப்புகழமிர்தம் மலர் 1, பக்கம் 208-ல் காண்க.

சிந்துரமின் மேவு போகக்கார :—

உயிர்களுக்கு இன்பத்தை நல்குவதற்காக இறைவன் கிரியா சக்தியாகிய தேவகுஞ்சரியுடன் போகமூர்த்தியாக விளங்குகின்றனன்.

குறமாது வேளைக்கார :—

வேளைக்காரன் வகுப்பைக் காண்க.

செஞ்சொலடியாரகள் வாரகார —

இனிய சொற்களையுடைய அடியார்களுக்கு அன்புடையவராக ஆண்டவன் விளங்குகின்றனர்.

"அடிபோற்றி யல்லி முடிசூட்ட வல்ல
அடியார்க்கு நல்ல பெருமாளே."

—(குடி வாழ்க்கை) திருப்புகழ்.

துங்கரணசூர சூரைக்கார :—

"துரிதமிடு நிருதர்புர சூறைக்கார பெருமாளே."

—(ஒருபொழுது) திருப்புகழ்.

ஆண்மைக்கார :—

"ஆரியபரம ஞானமு மழகும்
ஆண்மையு முடைய பெருமாளே'

—(தோரண) திருப்புகழ்:

கருத்துரை.

யாகரக்ஷகரே! தமிழ் மாலையை யணிபவரே! தேவசகாயரே! சேவற்கொடியுடையவரே! வணக்கம்புரிவாரது நேயரே! குன்றெறிந்த குமாரமூர்த்தியே! வல்லீதேவ சேனாசமேதரே! அடியார்க்கு அன்பரே! அசுரகுலகாரரே! செந்திலாதிப! தமிழ்ப்பாக்களைப் பாடி அழிகின்ற மனிதர்கள் வாசல்தோறும் அலையாமலும், பண்டைவினை நீங்கவும், பெண்ணாசையறவும், செம்பொன் மயில்மீது வந்தருள்வீர்.

உ

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது.)

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

मयूराधिरूढं महावाक्यगूढम्
मनोहारिदेहं महच्चित्तगेहम् ।
महादेवदेवं महावेदभावम्
महादेववालं भजे लोकपालम् ॥

(3) மயூராதி4ரூட4ம் மஹாவாக்ய கூ3ட4ம்
மனோஹாரி தே3ஹம் மஹச்சித்த கே3ஹம் ।
மஹாதே3வ தே3வம் மஹா வேத3 பா4வம்
மஹா தே3வபா3லம் ப4ஜே லோகபாலம் ॥

அவதாரிகை.

இந்த சுலோகத்தில் குமாரக்கடவுளது பெருமைகளை கூறித் துதிக்கின்றார்.

பதவுரை.

மயூராதி ரூடம் — மயிலின்மீது ஏறிக்கொண்டிருப்பவரும்,
மஹாவாக்ய கூடம் — தத்வமஸி முதலிய மஹாவாக்கியங்களின் சூட்சுமமாக (பொருளாக) இருப்பவரும்,
மனோஹாரி தேஹம் — அழகிய சரீரத்தை யுடையவரும் (அருளுருவத்தை யுடையவரும்),
மஹச்சித்த தேஹம் — பெரியோர்களின் உள்ளமே திருக்கோயிலாகக்கொண்டவரும்,

மஹாதேவதேவம் — பிரமன் விஷ்ணுமுதலிய தேவச்சிரேட்டர்களுக்கும் தேவனும், (அல்லது பிரணவார்த்தத்தை உபதேசித்த குருவாகையால் பரமசிவனுக்கும் தேவனும்),

மஹாவேத பாவம் — வேதங்களின் உட்கருத்தாக இருப்பவரும்,

மஹாதேவ பாலம் — சிவபெருமானுடைய குமாரரும,

லோக பாலம் — உலகத்தைக் காப்பவருமான குமாரக்கடவுளை,

பஜே — வழிபடுகிறேன்.

பொழிப்புரை.

மயிலை வாகனமாக வுடையவரும், தத்துவமஸி முதலிய மஹா வாக்கியங்களுக்குள் சூட்சுமார்த்தமாக விளங்குபவரும், பெரியோர்களின் உள்ளத்தை ஆலயமாகக்கொண்டவரும், அழகிய அருட்டிருமேனியையுடையவரும், பிரமவிஷ்ணுவாதி தேவச்சிரேட்டர்களுக்கெல்லாம் வழிபடுகடவுளும், பெருமைபொருந்திய வேதங்களின் தாத்பரியரும், பரமசிவனுக்குப் புத்திரரும், உலகத்தை இரட்சிப்பவருமாகிய குமாரக்கடவுளை நான் வழிபடுகிறேன்.

यदा संनिधानं गता मानवा मे
भवाम्भोधि पारं गतास्तेन दैव ।
इति व्यञ्जयन् चिन्दुतीरेय आस्ते
तमीडे पवित्रं पराशक्ति पुत्रम् ॥

(4) யதா ஸந்நிதாநம் கதா மாநவாமே
பவாம் போதிபாரம் கதாஸ்தேத தைவ |
இதிவ்ய ஞ்ஜயன் ஸிந்து தீரேய ஆஸ்தே
தமீடே பவித்ரம் பராசக்தி புத்ரம் ||

அவதாரிகை.

இந்த சுலோகத்தில் சுவாமிநாதன் சமுத்திரக்கரையில் எழுந்தருளியிருக்கும் காரணத்தை விளக்குகிறார்.

பதவுரை.

மானவா: — மனிதர்கள்,
யதா — எப்பொழுது,
மே — எனது,
ஸந்நிதானம் — சந்நிதானத்தை,
கதா: — அடைகிறார்களோ,
ததாஏவ — அப்போதே,
தே — அவர்கள்
பவாம் போதி பாரம் — பிறவிக்கடலின் மறுகரையை (முத்தியை),
கதா — அடைகிறார்கள்,
இதி — என்று
வ்யஞ்ஜயன் — (குறிப்பாக) உணர்த்தும்பொருட்டு.
ய: — யாதொரு சுவாமியானவர்,
ஸிந்துதீரே — சமுத்திரக்கரையில்,
ஆஸ்தே — எழுந்தருளியிருக்கிறாரோ,
தம் — அந்த
பவித்ரம் — பரிசுத்தமான,
பராசக்தி புத்ரம் — பராசக்தியின் புத்திரரை,
ஈடே — துதிக்கின்றேன்.

பொழிப்புரை.

மக்கள் எனது சந்நிதியை அடைந்தமாத்திரத்திலேயே அபாரமாகிய சமுசாரசமுத்திரத்தின் மறுகரையை யடைந்து முத்தியின் பத்தை நுகர்கின்றனர் என்னும் உண்மையை உணர்த்தும்பொருட்டு கருணைக்கடலாகிய யாதொரு கடவுள் கடற்கரையில் வசிக்கின்றாரோ? பரிசுத்தரும் பராசக்தியின் புதல்வருமாகிய அவரைத் துதிக்கின்றேன்.

यथाब्धेस्तरङ्गा लयं यान्ति तुङ्गा
स्तथैवापदः सन्निधिं सेवमाने ।
इतीवोर्मिपङ्क्तीर् नृणां दर्शयन्तम्
सदा भावये हृद्सरोजे गुहन्तम् ॥

(5) யதாப்தே ஸ்தரங்கா லயம்யாந்தி துங்கா
ஸ்ததைவாபத: ஸந்நிதிம் ஸேவமானே ।
இதீ ஓர்மிபங்க்தீர் ந்ருணாம் தர்சயந்தம்
ஸதா பாவயே ஹ்ருத் ஸரோஜே குஹந்தம் ॥

அவதாரிகை.

இச்சுலோகத்தில் குகப்பெருமானுடைய சந்நிதியை அடைந்தவர்களுக்குத் துன்பமுண்டாகாது என்று விளக்குகிறார்.

பதவுரை.

யதா — எவ்வாறு,
அப்தே: — சமுத்திரத்தின்,
துங்கா: — பெரிய
தரங்கா: — அலைகள்,
லயம் யாந்தி — நாசத்தை யடைகின்றனவோ,
ததா — அவ்வாறே,
ஸந்நிதிம் — ஸந்நிதானத்தை,
ஸேவமானே — அடைந்தபோதே,
ஆபத: — ஆபத்துகளும் (பக்தர்களின் துன்பங்களும்),
லயம் யாந்தி — நாசத்தையடைகின்றன.
இதிவ — என்று,
ந்ருணாம் — மக்களுக்கு,
ஊர்மி பங்க்தீ — அலைகளின் கூட்டங்களை,
தர்சயந்தம் — காட்டுகின்ற,
ஸுகுஹம் — பிரசித்தரான குஹப்பெருமானை,
ஹ்ருத்ஸரோஜே — எனது மனதாகிய தாமரைப்பூவின்கண்,
ஸதா — எக்காலத்தும்,
பாவயே — எண்ணி வழிபடுகிறேன்.

பொழிப்புரை.

எங்ஙனம் அலைகள் மிகப்பெரியவையாயினும் கரையில் அடையுங்கால் ஒடுங்கிப்போகின்றனவோ அங்ஙனமே அன்பர்களின் துன்பங்களும் எனது சந்நிதியை யடைந்தவளவிலேயே ஒழிந்துவிடுகின்றன என்று அலைகளின் வரிசையை மக்களுக்கு உதாரணமாகக் காட்டுகின்ற குஹப்பெருமானை எனது மனதின்கண் எப்போதும் தியானித்து வணங்குகின்றேன்.

ஓம் குஹாய நம

கந்தர் திருவிளையாடல்.

(17-வது பக்கத் தொடர்ச்சி.)

'பன்னருஞ் சிறப்பின் மிக்க பனிவரை யரசன் றன்பால் கன்னியம் புதல்வியாகிக் கௌரி' தவம்புரிந்திருந்தகாலை, அசுரர் குலத்தலைவனும் சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசு செலுத்தி ஒப்பாருமிக்காருமின்றி தருக்குற்றிருந்தனன். அந்தக் காலத்தில் சனகாதியர் நால்வரும் சிவபெருமானை நோக்கி பன்னெடுங் காலம் தவம்புரிந்து இறைவனருளால் கைலைமலையை யடைந்து, நந்திதேவர் காவல் புரிகின்ற முதல்வாயிலையணுகி நந்தியெம்பெருமானை வணங்கி அவரருளால் சிவசந்நிதியுட்சென்று நான்முகன் முதலோர் காணா ஞானநாயகனைக் கண்டார்கள். தேவதேவனைக் கண்டவுடனே மொழிகுழற, முழுதுடல் புளகிக்க, விழிபுனல்பெருக, தீ சேர் மெழுகென உள்ளம் உருக, கரமலர் குவிய, இருதயமலர் மலர, ஹரஹர என்று தொழுது, வானோர்க்கரியமருந்தே போற்றி, ஏனோர்க்கெளிய இறைவா போற்றி என்று துதித்து, "அருட்பெருங் கடலே! பொருட்பெருங் கடலாம வேதமென்னும் புணரியில் மூழ்கி, புந்தி தெளியாது மயங்கியுள்ளோம்; மனம் சாந்தியை யடையவில்லை; அறியாமை நீங்கி மெய்யுணர்வு பெற்றோமில்லை; எமது மனம் அமைதியையடையும் வழியைக்காட்டி நல்லருள் புரிந்தருளவேண்டும்" என்று விண்ணப்பம் புரிந்தனர். அடியார்க்கருளும் அருட்பெரும் வள்ளல் அகமகிழ்ந்து "நமது மனமடங்கி மெய்யுணர்வு தலைப்படுமாறு கூறுதும்; இருங்கள்" என்று கூற சால்பெருந் தகைமை நால்வரும் பரமேசுவரனை வணங்கி அருகில் கைகுவித்த வண்ணமாக வீற்றிருந்தனர்.

சிவபெருமான் நந்தியங்கடவுளை நோக்கி "மலர்க்கணைக் கிழவனும் மன்மதன் தவிர வேறு யார்வந்தாலும் உள்ளே விடவேண்டாமென்று கட்டளையிட, நந்தீசர் "அங்ஙனமே" என்று கோபுரவாசலில் காவல்புரிந்திருந்தனர். கல்லாலின்கீழ் வீற்றிருந்த கண்ணுதற்

கடவுள் சனகாதியாக்கு சிவாகமங்களின் நுட்பங்களாகிய சரியை கிரியை யோகமென்ற முப்பாதங்களையும் கூற, சனகாதியர் "எந்தையே! எமக்கு மனமொடுங்குமாறு ஞானபாதத்தைப் போதிக்கவேண்டும" என்று வேண்ட, புரமெரித்த புரிசடைக்கடவுள் புன்முறுவல்கொண்டு முனிவர்களை நோக்கி, அது வாக்கினால் கூறுவதன்று; இப்படி சும்மாயிருப்பதேயாகுமென்று தமது திருமார்பிலமைத்த சின்முத்திரைக் கரத்தோடு, ஒரு கணப்போது யோகஞ் செய்வார்போல் மௌன நிலையைக்காட்டி வீற்றிருந்தனர்.

இருவரு முணரா வண்ண லேனவே ளெயிறி யாமை
சிரநிரை யநந்த கோடி திளைத்திடு மார்பிற் சீர்கொள்
கரதல மொன்று சேர்த்தி மோன முத்திரையைக் காட்டி
யொருகணஞ் செயலொன் றின்றி யோகுசெய்வாரி னுற்றான்.

அந்த யோகநிலையைக்கண்ட சனகாதியர் "சிவஞானமானது நூலறிவினால் கிடைப்பதன்று. அநுபவ அறிவாறகிடைப்பது" என்று முதல்வனருளால் தெரிந்து மனமொடுங்கி சித்திரப்பதுமைபோல் செயலறறு சிவஞானமுற்றிருந்தனர் சிவபெருமான் நால்வருக்கும் ஞானநிலையைக்காட்ட மோனநிலையில் இருந்த ஒரு கணப்பொழுதானது பிரமன்முதலிய தேவர்களுக்கெல்லாம் அநேக யுகங்களாயிருந்தது தேவர்களுக்கே இவ்வாறாயின் ஏனையோர்க்கு இத்துணைக் காலமாயிற்றென்று கூறவல்லார் யாவர்? காஞ்சிமாநகரில் கம்பாநதியின் பெருக்கைக்கண்டஞ்சி இறைவனைத் தழுவிக்கொண்ட இமயவல்லி எமபிரானது கண்புதைத்த காலம்போல், சிவமூர்த்தி ஒரு கணப்பொழுது யோகத்திலமர்ந்தது தேவர்களுக்குப் பற்பல யுகங்கள் கடந்தன. சிவமூர்த்தி மோனநிலையுற்றதனால் விண்ணுறையமரர்களும் மண்ணுறை மனிதர்களும் மாதர் கலவியின்றி காம இச்சை யறவேநீங்கி முறறத்துறந்த முனிவர்போல் இருந்தனர். அதனால் உலகில் ஆண்பெண் சேர்க்கையின்றி சிருட்டித்தொழிலும் நடவாமற்போயிற்று. உலகிற்கு காரணக்கடவுள் கண்ணுதற்கடவுளே என்பது இதனால் குன்றின்மேல்வைத்த விளக்கேபோல் வெளியாகிறதென்பதை யாரே மறுக்கவல்லார்.

இவ்வாறு உலகமெல்லாம் இடர்பட்டுநின்றகாலை, சூரபன்மனுடைய கொடுஞ்செயலுக்கஞ்சி தேவேந்திரன் தேவர்களுடன் பொனனுலகைவிட்டு இந்திராணியோடு மண்ணுலகஞ் சேர்ந்து, கைலை

மலையையடைந்து பரமேசுரனைக் காணாகி மேருமலையடைந்து, சூர பன்மனுடைய மகனாகிய பானுகோபன் பொன்னாட்டையழித்து தனது (இந்திர) குமாரனாகிய சயந்தனைச் சிறைபுரிந்த தன்மையைக் கேட்டு மனம் வருந்தி, மேருகிரியில் ஓர் புறத்தில் நீலகண்டப்பெரு மானை நோக்கி நெடுங்காலம் தவம்புரிந்தனன். அவனுடைய தவத் திற்கிரங்கி ஆலமுண்ட அண்ணல் விடைமேலூர்ந்துவந்து தெரிசனம் தர, இந்திரன் பன்முறையும் இறைஞ்சி நிற்க, சிவமூர்த்தி " ஆகண் டல! அளப்பருங்காலம் உடல்வருந்தி தவமிருந்தனை; நினக்குவேண் டிய வரம் யாது? கூறுதி " என்று அறியாதவர்போல் வினவ, அமரர் கோமான், " எந்நாட்டவர்க்கும இறைவா! சூரபன்மன் எம்மைத் துன்பக்கடலிலாழ்த்தி எனது மகனையும் இமையவரையும் சிறையிட்டு எமது நகராகிய அமராவதியைக்கொளுத்தி இடர்ப்பல செய்கின்ற னன். எம்பெருமானே! சூராதியரை யழித்து எம்மைக் காத்தருள வேண்டும் " என்றனன். சிவபெருமான் " புரந்தர! எமமையிகழ்ந்த தக்கன் வேள்வியில் நீவிர் இருந்தபாவத்தால் இந்தத்துன்பம் உமக்கு நேர்ந்தது; இனி எமக்கு ஒரு புதல்வன் தோன்றுவன். அப்புதல் வன் சூராதிகளையழித்து உமக்கு விண்ணுலக இனபவாழ்வை நல்கு வன் " என்று கூறி மறைந்தருளினர்

பின்னர் இந்திரன், "கண்ணுதற்கடவுள் கல்லாலின் கீழ் யோகம் புரிவார்போல் அமர்ந்திருக்கின்றனர். உமாதேவி மலையரையன் மக ளாய்த் தவஞ்செய்வாளாயினள். இங்ஙனமிருக்கின் அன்னார்க்குப் புதல்வன் எவ்வாறு தோன்றும்? புதல்வன் தோன்றினால் தானே நங்குறை நீங்கும் " என்று பலவாறு சிந்தித்து, மனோவதியென்னும் மாநகரடைந்து வியாழபகவானது மனைவியிடம் தன் மனைவியை இருத்தி, தேவர்குழாங்களுடன் அம்புயத்தவிசில் வைகும் அயனு டைய இருக்கை சென்று, முக்கட்பரமன் மோனநிலையிலிருப்பதால் படைப்புத்தொழிலின்றி மனவருத்தத்துடனிருக்கும் மலரவனைக் கண்டு அன்னனது அருணசரணாரவிந்தங்களை வணங்கி வழுத்திநின்ற னன். பிரமன் திருவருள்புரிந்து " புருகூத! வானவருடன் வந்த காரணம் யாது?" என்று வினவ, இந்திரன் சூரபனமனால் நேர்ந்த துன்பங்களையும், சிவபெருமான் கல்லாலின்கீழ் மௌனவிரதத்துட னிருத்தலையும், தன்னுடைய தவத்திற்கிரங்கி சிவமூர்த்தி அருளிய திறத்தையும் கூறி, மேல் உய்யும்வகையை உரைத்தருளவேண்டு மென்று குறையிரந்து நின்றனன். பிரமன் " தேவேந்திர! அருள்

வடிவினரும், உற்றவர்க்குதவும் நற்கருணை நாயகனும், யானும் மாலும் தேடிக் காணமுடியாத அண்ணலுமாகிய சிவபெருமான் வெள்ளியங்குன்றில் முனிவர் நால்வருக்கும் மோனமுத்திரையைக் காட்டி தவநிலையில் வீற்றிருப்பது நமது துன்பத்தை நீக்கி இன்பத்தை நல்குவதற்கே யாகும். சந்திரமௌலியாகிய தனிப்பெருந் தலைவன் ஆருயிர்களை யெல்லாம் சங்கரிப்பதும், அவ்வுயிர்களின் துன்ப நீக்கத்தின்பொருட்டே யாதல்போல கொடிய வெஞ்சூரனைக் கொண்டு நமக்கு இடர்புரிவதும் நமது பாவத்தைநீக்கி நல்லருள் புரிவதன்பொருட்டேயாம். மக்களைப்பெற்ற தாய்தந்தைகள் மக்களுக்கு நோய்வந்தகாலத்துப் பிறரைக்கொண்டு துன்புறுத்தியும் நோயை நீக்குவர், அது மக்கள்மீதுள்ள கருணையேதவிர சினத்தாலன்று. அதுபோல நம்முடைய தீவினைகளை நீக்குவதற்காகவே நமக்குத் தந்தையுந்தாயுமாகிய கறைமிடற்றணணல் இச்செய்கையைப் புரிந்துளார் மேகவாகன! அசுரர்களாகிய சண்டமாருதத்தால் அலைகின்ற நமது வினைகள் ஒருசிறிது விலகும் சமயம் நெருங்கியிருப்பதால கருணைக்கடலாகிய கண்ணுதல் அன்புடன் நின்பால்வந்து உய்யும்வகையை உணர்த்திப் போந்தனர். ஆதலால் நம்மையாளுடைப் பரமனே மேலும் அருள்புரிவன். அத்திருவருள் கைகூடுவதற்கு வேண்டிய முயற்சியையும் நாம் சிறிது செய்தல் அவசியமாகும். இவற்றையெல்லாம் நாராயணமூர்த்தியிடம் அறிவித்து மேல் நடக்கவேண்டியதற்கு எது செய்யத்தக்கதோ அதை விரைவிற்புரிவோம்; வருவாயாக" என்று இந்திரன் முதலிய இமயவருடனும் படைத்தற்றொழிலை நடத்தும் பங்கயாசனன் நாராயணர் உறையும் வைகுந்தம் செல்வதற்குப் புறப்பட்டனன்.

ஓம் குஹாயநம:

கற்பு

(22-ம் பக்கத் தொடர்ச்சி.)

கற்புடைய பெண்மணிகளுக்கு நிகரான பொருள் மூவுலகங்களிலுமில்லை கற்புடையமாதர்களை அருந்தவராலும் அழிக்கமுடியாது. கறபுடையோர்களுக்கு இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என்ற முக்கால ஞானமும் உண்டாகும். இவற்றை விளக்கும் அடியில்வரும் புனித சரிதையைப் பெண்மக்கள்படித்துப் பயன் பெறுவார்களாக.

அந்தணர்களுக்குள் சிறந்தவனும் வேதங்களை அத்யயனம் செய்தவனும் தவத்தையே தனமாகக் கொண்டவனும் தருமசீலனுமாகிய கௌசிகனென்கிற ஒரு வேதியன் இருந்தான். அந்த மறையவன் அங்கங்களுடனும் உபநிடதங்களுடனும் கூடிய வேதங்களை நன்றாகக்கற்றுணர்ந்தவன் அவன் ஒருமரத்தினடியில் வேதஙகளை உச்சரித்துக்கொண்டு அமர்ந்திருந்தான். அந்தமரத்தின் மீது ஒரு கொக்கு உட்கார்ந்திருந்தது. அப்பொழுது அந்த கொக்கு பிராம்மணன் மீது எச்சமிட்டது. உடனே அவனுக்குச் சினமூண்டது. மரத்தின் உச்சியிலுள்ள கொக்கை நன்றாக விழித்துப்பார்த்து தீங்கு செய்யநினைத்தான். கௌசிகன கோபத்தால் பார்த்த உடனே அவன் பார்வையாகிற வெப்பத்தால் தகிக்கப்பட்டு கொக்கு கீழே விழுந்து மாண்டது. அதைக்கண்ட கௌசிகன் "அந்தோ! நான் ஒரு உயிருக்குத் தீங்கு செய்துவிட்டேன். கோபத்திற்கு அடிமைப்பட்டு தீயகாரியத்தைப் புரிந்துவிட்டேன்" என்று வருந்தினன். கற்றறிந்தவராகிய அவன் இவ்வண்ணம் பலவாறுகூறி பிக்ஷைக்காக ஓர் கிராமத்தையடைநதான். பிக்ஷையெடுத்துக் கொண்டே சென்று ஒரு வீட்டில் நுழைந்து 'பிக்ஷை கொடு' என்று கேட்டான். அந்த வீட்டிலிருந்த பெண்ணரசி பிக்ஷைகொடுக்க எழுந்த அதே சமயத்தில் அவளுடைய கணவன் மிகவும் பசியினால் வாடி திடீரென்று வீட்டினுள் நுழைந்தான். அந்தமாது கௌசிகனைச் 'சற்று இரும்' என்று

சொல்லிவிட்டு நாயகனுக்குக்காலலம்ப நீரையும் ஆசமன தீர்த்தத்தையும் ஆசனத்தையும் கொடுத்து இருக்கவைத்து, இனிய மொழிகளைக் கூறி நல்ல சுவையுள்ள உணவுகளைத்தந்து உபசரித்தாள். கணவனையே கடவுளாகநினைக்கின்ற அக்காரிகை கணவனுண்டபின் உண்பவள். மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் பதியையே வழிபடுபவள். பதி உணவு கொள்ளாமுன் தண்ணீரும் குடிக்கமாட்டாள். ஆசார முள்ளவளும் பதிபணிவிடையில் பற்றுள்ளவளும் குடும்பத்திற்கும் கொழுநனுக்கும் இதத்தைச் செய்பவளும் அருந்ததிக்கு நிகரானவளுமாகிய அவள் எப்பொழுதும் எது நன்மையோ அதையே செய்து கொண்டுவந்தாள். தேவதைகளுக்கும் அதிதிகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் அப்படியே மாமியார் மாமனார்களுக்கும் தினமும் பணிவிடைபுரிவதில் ஊக்கமுள்ளவள். எப்பொழுதும் இந்திரியங்களை யடக்கினவள். இனியபார்வையும் இனிய மொழியுமுள்ளவள். நற்குணங்களுக்கெல்லாம உறைவிடமாகிய அப்பெண்ணரசி நாயகனுக்கு வேண்டிய உபசாரங்களையெல்லாம் வழுவறப்புரிந்து பிறகு பிராம்மணனுக்குப் பிக்ஷையிட நினைந்தாள். கீர்த்தியுள்ளவளான அம்மங்கை வெட்கத்துடன் இதுகாறும் நின்றுகொண்டிருந்த அதிதியாகிய கௌசிகனுக்குப் பிக்ஷை யெடுத்துக்கொண்டு வெளியேவந்தாள்.

கௌசிகன் "அம்மா! நீ என்னை நில் என்று சொல்லி பிக்ஷாடனத்திற்குத் தடைசெய்தாய். என்னை இதுகாறும் தாமதிக்கச் செய்தனை. இது தருமமோ? என்றனன். கோபத்தால் மிக்க தாபத்தையடைந்தவனும் ஒளியினால் பிரகாசிப்பவனுமாகிய கௌசிகனை நோக்கி அந்த உத்தமி, "பிராம்மணோத்தமரே! பொறுத்துக்கொள்ளும். என்னிடத்தில் கருணைபுரிவீராக. கற்றறிந்தவரே! என் குற்றத்தை மன்னிக்கவேண்டும். எனக்குக் கணவன் பெரியதெய்வம். பசித்துக்களைத்துவந்த எனது பதிக்குப்பணிவிடை செய்தேன். அதனால் தாமதமாயிற்று" என்றனள். கௌசிகன் "கர்வங்கொண்டவளே! உனக்குப் பிராம்மணர்கள் கௌரவமுள்ளவர்களல்லர். உன் கணவனே உன்னால் கௌரவமுள்ளவனாகச் செய்யப்பட்டான். இல்லறத்திலிருக்கிற நீ பிராம்மணர்களை அவமதிக்கிறாய்: இந்திரன்கூட இவர்களை வணங்குகிறான்; அவ்வாறிருக்க பூமியிலுள்ள மனிதன் இவர்களை வணங்குவதில் ஐயமென்ன? நீ இதனை அறியவில்லை. நீ அறிவிற் சிறந்த அருந்தவருடைய பெருமையைக் கேட்டதில்லை;

அக்கினிக்கு ஒப்பாயிருக்கிற பிராம்மணர்கள் அவமதிக்கப்பட்டால் மலைகளோடும் வனங்களோடும் தீவுகளோடும் கூடின பூமியைக்கூட விரைவாக எரித்துவிடுவார்கள் " என்று சொன்னான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட அம்மாதரசி "தபோதனரே! நான் கொக்கல்லேன்; கோபத்தை விட்டுவிடும்; கோபமுள்ளவரான நீர் கோபமுள்ள பார்வையினால் என்னை என்னசெய்துவிடுவீர்? நான் தேவர்களுக்கு நிகரானவர்களும் பெரிய மனமுள்ளவர்களு மான பிராம்மணர்களை அவமதிக்கிறதில்லை. பிராமணரே! நீர் இந்த அபராதத்தைப் பொறுக்கவேண்டும் நான் சிறந்த புத்தியுடையவர் களான பிராம்மணர்களுடைய சக்தியையும் மகிமையையும் அறி வேன்; தவத்திற் சிறந்த அந்தணருடைய கோபத்தால் கடலானது உவர்நீருள்ளதும் பானஞ் செய்வதற்குத் தகாததுமாகச் செய்யப் பட்டதன்றோ. அப்படியே ஒளிசெய்கின்ற தவமுடையவர்களும பரம்பொருளைத் தியானிப்பவர்களுமான முனிவர்களுடைய கோபத் தீயானது இன்றுங்கூட சமுத்திரத்தினுள் தணியாமலிருக்கிறது; அளவுகடந்த ஆற்றலுள்ள அந்த அந்தணர்களை எந்த அறிவிலிதான் அவமதிப்பான்? மிக்க கெட்ட எண்ணமுள்ளவனும் கொடுமொழி யுடையவனுமாகிய வாதாபி என்கிற அரக்கன் அந்தண சிரேட்டர் களை அவமதித்ததனால் அகத்தியமுனிவரையடைந்து ஜீரணமானான். மகாத்மாக்களான அந்தணர்களுடைய அநேகபெருமைகள் கேட்கப் படுகின்றன. மறையவரே! மகாத்மாக்களுக்குக் கோபமும் அதி கம்; அனுக்ரகமும் அதிகம்; இந்தக்குற்றத்தை நீர் பொறுக்கக் கடவீர்; பதியினுடைய பணிவிடையால் உண்டாகும் தருமமே எனக்கு இனிக்கிறது; எல்லாத் தேவதைகளுள்ளும் எனக்குக் கண வனே பரதேவதை; கணவனைக் காட்டிலும் சிறந்த தெய்வம் எனக்கு மூன்று உலகங்களிலுமில்லை; எனது தெய்வமாகிய கணவனுக்கு என் கடமையைச் செய்வேன்; பதிக்குப்புரியும் பணிவிடையின் பயன் எவ்விதமென்பதைப்பாரும்; கொக்கானது உம்மால் கோபத் தால் எரிக்கப்பட்டதன்றோ? அது என்னால் அறியப்பட்டது. பதி பக்திபுரிவோர்க்கு தவமும் ஞானமும மோக்ஷமும் தானேவரும்; மனிதர்களுக்கு கோபமானது உடலிலுள்ள பகைவன்; நீர் கோபித் துக்கொள்ளவேண்டாம; பதிவிரதையான நான கொக்கைப்போல் உம்மால் கொல்லத்தக்கவளாகமாட்டேன்; எவன் கோபத்தையும் மோகத்தையும் விடுகிறானோ அவனைத் தேவர்கள் பிராம்மணனாக அறி

கிறார்கள் ; எவன் இவ்வுலகத்தில் சத்தியவாக்கியங்களை உரைப்பனோ? எவன் குருவை மகிழ்விப்பனோ ? பிறரால் தான் துன்பஞ்செய்யப் பட்டாலும் பிறனைத் துன்பஞ்செய்யாமலிருப்பவன் எவனோ ? அவனைத் தேவர்கள் பிராமமணனாக அறிகிறார்கள். எவன் இந்திரியங்களை வென்றவனாகவும் தருமத்தில் முக்கிய நோக்கமுள்ளவனாகவும் வேதாத்யாயனத்தில் பற்றுதலுள்ளவனாகவும சுத்தனாகவுமிருப்பானோ? காமம் கோபமிரண்டும் எவனுக்கு வசப்பட்டிருக்குமோ ? அவனைத் தேவர்கள் பிராம்மணனாக அறிகிறார்கள். தருமங்களை அறிந்தவனும் சிறந்த மனமுடையவனும் எல்லாத் தருமங்களையுஞ் செய்பவனுமான எந்த மனிதனால் உலகம் தனக்குச்சமமாக எண்ணப் படுகிறதோ ? அவனைத் தேவர்கள பிராமமணனாக அறிகிறார்கள். எவன் வேதங்களை அத்யபனஞ்செய்விப்பனோ, தானும் அத்யயனம் செய்வனோ, எவன் யாகம் செய்வனோ, பிறர்களுக்கும யாகத்தைச் செய்விப்பனோ, எவன் சக்திக்குத்தக்கபடி தானம் செய்வனோ, அவனைத் தேவர்கள் பிராம்மணனாக அறிகிறார்கள் பிரமசரியத்தையும் சொல்வன்மையுள்ளவனும, மதமில்லாதவனும், சிறந்த வேதங்களை ஓதினவனும், வேதங்களை அத்யயனம் செய்துகொண்டே இருப்பவனுமான உத்தமனைத் தேவர்கள் பிராம்மணனாக அறிகிறார்கள். பிராம்மணர்களுக்கு எது மகிமையோ அதை இவர்களுக்கு இருப்பதாகச் சொல்லவேண்டும். அப்படிச் சத்தியத்தைப் பேசுகிறவர்களுக்கு பொய்யில் மனமானது மகிழ்ச்சி யடையாது. பிராம்மணனுக்கு வேதத்தையும், மனத்தின் அடக்கத்தையும், மனம் வாக்கு காயம் என்னும் மூன்றினுடைய ஒற்றுமையையும், இந்திரிய நிக்ரஹத்தையும் சாசுவதமான பொருளாகச் சொல்லுகிறார்கள். தருமத்தையறிந்த ஜனங்கள் சத்தியத்தையும் மனோ வாக்கு காயங்களுடைய ஒற்றுமையையும் சிறந்த தருமமாகச் சொல்லுகிறார்கள். சாசுவதமான தருமமானது எவ்விதத்தாலும் அறியமுடியாதது. அந்தத் தருமமானது சத்தியத்தில் நிலைபெற்றிருக்கிறது. தருமமானது சுருதியைப் பிரமாணமாகக்கொண்டிருக்குமென்பது பெரியோர்களுடைய உபதேசம்.

வேதியரே! சூட்சுமமான தருமமே பலவாராகக்காணப்படுகிறது. தேவரீரும் தருமத்தை அறிந்தவர்; வேதாத்யயனத்தில் பற்றுள்ளவர்; சுத்தர். தருமத்தை நீர் உள்ளபடி அறியவில்லையென்பது என்னு

டைய எண்ணம். உத்தம தருமத்தை நீர் அறியாமலிருந்தால் மிதுலாபுரிக்குப்போய் தருமவியாதரைக் கேளும். பிதாமாதாக்களுக்குப் பணிவிடைசெய்பவரும், உண்மையையுரைப்பவரும், ஜிதேந்திரியருமான வியாதர் மிதிலையில் வசிக்கிறார். அவர் உமக்குத் தருமங்களைச் சொல்லுவார். உமதிஷ்டப்படி அவ்விடம் செல்லுவீராக. உமக்கு மங்களம். பரமதார்மிகரான அந்த வியாதர் உம்முடைய ஐயத்தை அகற்றுவார். அதிகமாகச் சொல்லப்பட்டிருந்தாலும் பொறுத்தருள்வீர். எவர்கள் தருமத்தை அறிகிறார்களோ அவர்களெவருக்கும் பெண்கள் வதம்செய்யத் தகாதவர்களல்லரோ ? என்று சொன்னாள்.

கௌசிகன் " கல்யாணி! உனக்கு மங்களம் ; கோபம்போய் விட்டது ; நான் அன்புள்ளவனாக இருக்கிறேன் ; நின்னால் சொல்லப் பட்ட நிந்தையானது எனக்குச் சிறந்த நன்மையே ஆயிற்று. உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். அம்மா ! மிதிலைக்குச் செல்வேன். என்காரியத்தை நிறைவேற்றிக்கொள்வேன். இப்படிப்பட்ட நடையுள்ள நீ பாக்கியவதியாக இருக்கிறாய் " என்று இன்னுரைகூறி விடைபெற்றுச் சென்றான்.

ஓம் குருப்யோ நம :

குரு சிஷ்ய லக்ஷணம்

சச்சிதாநந்தன்.

முன்னுரை.

அறிவிற் சிறந்த பெரியீர் !

ஒருவன் துன்பத்தை விடுத்து இன்பத்தைப் பெறவேண்டு மானால் மறச்செய்கையை யொழித்து அறச்செய்கையைக் கடைப் பிடித்து குருவருளை அவசியம் பெறவேண்டும். குருவருள்பெற்ற வன் சகலவித துக்கங்களும் நீங்கிப்பரமானந்த வாழ்வைப் பெறு வான் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை ; ஆதலால் ஒவ்வொருவரும் சற்குருவையடைந்து வழிபட வேண்டியது அவஸ்யம். ஆகவே யானிப்போது கூறப்புகுந்த விஷயம் குரு சிஷ்ய லக்ஷணம் என்ப தாம். ஆனால் ஸ்ரீ சற்குருலக்ஷணத்தையும் சீடனுடைய லக்ஷணத் தையும் சாங்கோபமாக எழுதிமுடிக்க முடியாது ; ஏனெனில் ? சாஸ் திரங்களில் மிகவும் தேர்ச்சியுள்ளவர்களால் விவரிக்கத்தக்கது. ஆயி னும் இவ்வரிய விஷயத்தை இச்சிறுவனால் எழுதத் தொடங்குவது திருப்பாற்கடலை சிற்றெறும்பு பருகநினைப்பதுபோலவும், சந்திரனைக் காத்தால் பிடிக்கத தாவுவதுபோலவும், கடலைக் கடக்கக் காத்தால் நீந்துவதுபோலவும் ஒக்கும். ஆயினும் என் விசாரணைக்கும் கேள் விக்கும் எட்டினமட்டிற் சுருங்கக்கூறுவதை அன்பு பாலித்து ஏற்றுக் கொள்வீரெனத் தோற்றங்கொண்டே இங்ஙனம் இறகுகோலை ஏவ லானேன். இதில் நேரிடுந்தவறுகளை நீக்கிக் குணப்பொருளைச் சீர் தூக்கி ஆதரிக்க நமது பக்தசீலராகிய பத்திராதிபரையும் அவர் கல்விக் கடலிற்றுளைந்து விளையாடும் உத்தமர்களையும் வேண்டுகிறேன்.

(ஸ்ரீகுரு: ஸர்வகாரண பூதா ஸக்தி)

—பாவனோபநிஷத்.

மெய்யன்பர்களே !

கு—ரு—என்னும் இந்த இரண்டு அக்ஷரமே சப்தகோடி மஹா மந்திரங்களிலும் மிகவும் சிரேஷ்டமானது. குரு கீதையில்

"ஸப்த கோடி மஹா மந்த்ரா: சித்தவிப் ப்ரமகா நரக:
ஏகமேவ பரோ மந்த்ர: குருரித் த்யக்ஷரத்வயம்"

என்று சொல்லப்படுகிறது.

குகாரம் அந்தகாரம்; ருகாரம் (அதனை விழுங்கும்) தேஜஸெனப் படுகின்றது. அஞ்ஞானத்தை விழுங்கும் ப்ரஹ்மம் "குருவே"; சம்சயமில்லை என்றும், கு-என்றால் கா டா ந் த கா ர ம்; ரு-என்றால் காடாந்தகாரத்தை நாசம் செய்யப்பட்டவன்; ஆதலால் குரு என்றால் அஞ்ஞானமாகிய காடாந்தகாரத்தை நாசம் செய்யப்பட்டவன் என்றும், குகாரம்-குணாதீதமாம்; ரூபாதீதம் ருகாரமாம். குணரூபங்களில்லாததாயிருத்தலால் குருவென்று சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றது.

குரு—அதாவது ஆசிரியன்

"ஆசிநோதிஹி ஸாஸ்த்ராதா நாசா ரேஸ்தா பயத்யபி
ஸ்வயமா சரதே யஸ்மாத்-தஸ்மாதா சார்ய உச்யதே,"

என்கிறபடி சாஸ்திரார்த்தங்களைக்கூட்டிப் போதித்துச் சீடனை நல்லொழுக்கத்தில் நிலை நிறுத்துகிறவனும், அதுபோலவே தானும் நன் மார்க்கத்தைக் கடைப்பிடித் தொழுகுபவனா யிருத்தலால் ஆசாரியனெனப்படுகிறான்.

"குரு லக்ஷணம்"

ஆசாரியனானவன், "ஆசார்யோ வேத ஸம்பந்நோ . . . . . . மம்த்ரஜ்ஞோ மம்த்ரபக்தஸ்சஸதா மம்த்ரஸ் ரயஸ்ஸுசி—குருபக்தி ஸமாயுக்த: புராணஜ்ஞோ விசேஷத:—ஏவம் லக்ஷண ஸம்பந்நோ குருரித்யபி தியதே" என்கிறபடி வேதாத்யயனம் செய்தவனும், த்வேஷமில்லாதவனும், மந்திரமறிந்தவனும், ஆசாரிய பக்தியுடையவனும், விசேஷமாய்ப் புராணங்களைப் படித்தவனும், ஆத்மஞான நிஷ்டையுடையவனும், ஒருவித பயனையும் கருதாமல் போதிப்பவனும், பணத்திற்காகவோ புகழுக்காகவோ, பெயருக்காகவோ, கற்பிக்காமல் சீடனிடம் கருணையினால் மட்டும் உபதேசிப்பவனுயிருத்தல்வேண்டும்.

ஆசிரியனுடைய இலக்கணத்தை ஆத்திரையன் பேராசிரியரும்,

"வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
வான் யாறன்ன தூய்மையும் வான்யாறு
நிலம் படர்ந்தன்ன நலம்பட ரொழுக்கமும்

தீங்க ளன்ன கல்வியுந் திங்களோடு
ஞாயி றன்ன வாய்மையும் யாவது
மஃகா வன்பும் வெஃகா வுள்ளமும்
துலைநா வன்ன சமநிலை யுள்பட
வெண்வகை யுறுப்பின ராகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையும் தாளா அண்மையு
முலகிய லறிதலு நிலைஇய தோற்றமும்
பொறையு நிறையும் பொச்சாப் பின்மையும்
அறிவு முருவு மாற்றலும் புகழுஞ்
சொற்பொரு ளுணர்த்துஞ் சொல் வன்மையும்
கற்போர் நெஞ்சங் காமுறப் படுதலும்
மின்னோ ரன்ன தொன்னெறி மரபினர்
பன்னருஞ் சிறப்பி னல்லா சிரியர் ''
எனும் தொல்காப்பிய பாயிர சூத்திரத்தாலறிக.

மேலே கூறின இலக்கணத்தை யுடையவனே குருவென்னும் பதவிக்கேற்றவன்.

'' ஆசார்யு ஏவ ஸம்ஸார மோசக ப்ரத உச்யதே:
ஆசார்யோ நாம வேதாந்த விசாரணுத்த வேதன:
—காந்தம்.

சம்சாரமாகிற ஜநன மரண துக்கத்திலிருந்து விடுவிக்கிறவர் குருவேதான்; குரு யாரென்றால் வேதாந்த விசாரத்தினாலடைந்த ஆத்துமக்ஞானமுடையவர் யாரோ அவரே குருவென்று சொல்லப் படுகிறது. சகல சமுசாரத்தையும் மித்தியவடிவமாக உபதேசிக்கும் குருநாதரானவர் பிராஹ்மணனாயினும், அல்லது வைசியனாயினும், அல்லது சூத்திரனாயினும், ஸ்திரீயேயாயினும், அல்லது நபும்சகனே யாயினும், அல்லது வயதில் சிறியவனாயினும் அவரேதான் குருவாகப் பாவித்தல்வேண்டும்.

ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளும்

, , , . . த்ருட்ப்ரஜ்ஞாஹி யஸ்யாஸ்தீசேத்
சண்டாளோஸ் துத்விஜோஸ்து குருரித்யேஷா மனீஷமம்
—மனீஷாபஞ்சகம்,

த்ருட்ப்ரஜ்ஞாஹி - திடமான ஞானம், யஸ்ய - எவனுக்கு, அஸ்திசேத் - இருக்கின்றதோ, (ஸது-அப்படிப்பட்டவன்) சண்டா

ளோஸ்து - சண்டாளனுனபோதிலும், த்விஜோஸ்து - பிராம்மண னுனபோதிலும், குருரிதி - குரு என்பது, மம - என்னுடைய, ஏஷா மனீஷா - என்னுடைய அபிப்ராயம் என்றுர்.

நாம் ஆற்றைக்கடக்கவேண்டுமென்றுல் படகுவோட்டுபவனைக் கொண்டு கடக்கின்றேம். படகு வோட்டுபவன் ஈனஜாதியாகயிருந் தாலும் அவனைத்தவிர்த்து ஆற்றைக் கடக்கமுடியாது ; அதுபோல் கற்றவன் ஈனஜாதிப் பிறப்பினனுயினும் அவனைக்கொண்டே தான் கற்கவேண்டும்

நாலடியாரிலும்,

தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்—காணுய்
அவன்றுணை யாவாறு போயற்றே நூல்கற்ற
மகன்றுணையா நல்ல கொளல்.

என்றுர்

இதற்குச் சான்றுக பிரமவிருடிகளாகிய துருவாசர் முதலாயி ஞேர் நானகாம்வருணத்தாளுகிய விதுரனிடத்திலே ஞாஞேபதேசம் பெற்றுர்களென்றும், திருத்துறையூரிலிருந்த சகலாகம பண்டிதரென் னும் அருணந்தி சிவாசாரியா திருவெண்ணெய்நல்லூரிலிருந்த நான் காம் வருணத்தாராகிய மெய்கண்ட தேவரிடத்திலே ஞாஞேபதேசம் பெற்றுரென்றும, பாரத, பாகவதங்களிலும், சைவபுராணங்களிலும் கூறப்பட்டுள்ளது..

(தொடரும்.)

சிவமயம்.

திருவிளக்குப்பூசை

சிவசுப்பிரமணியன்.

நாம் தீபத்தையும் அக்கினியையும் வணங்குகிறோமென்று சிலர் நம்மை ஏளனமாகக் கருதுகின்றார்கள். அது கடவுள் இலட்சணம் பூரணமாக அறியாத்தன்மையாகும் நமது முன்னோர்பயனற்றகாரியத்தையேனும் குற்றமுடையவற்றையேனும் செய்யும்படி நமக்குக் கட்டளையிட்டிருக்கவில்லை. அவர்கள் அனுபவமாக யாவுமறிந்தே கூறியிருக்கிறார்கள்.

இப்போது தீபம் அல்லது அக்னி என்பதை நாம் வணங்குவதற்குக் காரணம் யாதென்று நோக்கின், அக்னியினிடத்தில் கடவுளின் முக்கிய இலக்ஷணங்களில் சில பொருந்தியிருக்கின்றன என்பதால்தான் என்று அறியலாம்.

அதோடு கடவுளும் அடியார்களுக்கு அருள்செய்ய அதன்வழியாய் வெளிப்படுகிறார் என்பது நம்முன்னோர் கண்டது. நெருப்பினிடத்தில் காணப்படும் குணங்களும் கடவுளிடத்துள்ள குணங்களும் ஒற்றுமையாயிருப்பதைச் சிறிது சிந்திப்போம். முதலாவது கடவுள் பேரொளியுடையவர், அதாவது மிகுந்த பிரகாசமுடையவர். மாமணிச்சோதியான் என்றும், சோதியே, சுடரே, சூழொளி விளக்கே என்றும் பெறியோர் கூறியிருக்கின்றார்கள். விளக்குக்கும் அதாவது நெருப்புக்கும் வெளிச்சம் இருக்கின்றது. இரண்டாவது, கடவுள் எங்கும் எப்பொருள்களிலும் இருப்பதுபோலவே நெருப்பும் அதாவது சூடு இல்லாத பொருள் உலகில் இல்லை. சூடு குறைவுற்றால் அப்பொருள் அழிவுறும். மனிதரும் சூடு குறைந்தபின்னரே சாகின்றனர். மூன்றாவது, கடவுள் எல்லாவற்றையும் அறிந்து மற்றோரையும் அறிவிப்பர். அதுபோலவே விளக்கும் எல்லாவற்றையும் காட்டித் தன்னையுங்காட்டிக்கொள்ளும். நான்காவது, கடவுள் தூய உடம்பும் தூய்மையும் உடையவர். தன்னிடம் சேர்ந்தாரையும் தூய்மை செய்

வர். நெருப்பும் தான் தூய்மையாயிருந்துகொண்டு தன்னிடம்சேரும் பொருள்களையும தூயமைசெய்யும். அதாவது நெருப்பிலிட்ட எப்பொருள்களும் நீருகித் தூய்மையாகும். ஐந்தாவது, கடவுள் தன்னைச் சேர்ந்தார்க்கு இன்பமும் சேராதார்க்குத துன்பமும் கொடுப்பது போன்றே நெருப்பும் தன்னைச்சேர்ந்த மனிதர் குளிர்விட்டு சுகமும், உண்டிமுதலியவை அடைநது இன்பமும், அடையச்செய்து சேரார்க்குக் குளிரும் மந்தமும் கொடுத்துத் துன்பமும அடையச்செய்கிறது.

இதுவரை கூறிவந்த குணங்கள் எல்லாம் எல்லா மதத்திற்கும் பொதுவானது. இனி நம் சைவ சித்தாந்த மதத்திற்குரிய சில குறிப்புக்குணங்களும் விளக்கினிடம் காணக்கூடும். நம் சைவசமயக் கொள்கைப்படி கடவுள் பாதிஉடலை அம்மையாம் உமாதேவியாருக்குக்கொடுத்து மங்கைபங்காளன் எனப் பெயர்பெற்றனர். அதுபோல் விளக்கிலும் தீ எரிகிற இடத்தில் ஒரு நிறமும், வெளியில் ஒரு நிறமுமாக இரண்டுபாகங்கள் தோன்றும். இனி அம்மையின் நிறம பச்சை கலந்த கருப்பு என்பர். அதுபோல் விளக்கிலுள்ள இரண்டுபாகங்களில் உள்பாகம் சிறு ஊதாநிறமுள்ளது. அம்மையே கடவுளின் சக்தி அல்லது வல்லமை யாவர்? அதுபோல் விளக்கு எரிவதற்கு நீலநிறமான அந்தப்பாகமே முக்கியமானது அங்குதான் எண்ணெய் ஆவியாகி எரியத்தயாராகிறது சிவபெருமான் நிறம் பொன்னிறம் என்பர். அதுபோல் மற்றப்பாகம் பொன்னிறங்கொண்டுவிளங்கும்.

ஆகையால், எவ்விதத்திலும் சிவபெருமானை ஒத்துள்ள குணங்களில் சில தனக்குச் சொந்தமாகக்கொண்ட விளக்கை நாம் எல்லோரும் பூசித்துச் செலவமும் முத்தியும் பெறவேண்டுமென்பது நமமுன்னோர் கட்டளையாகும்.

அவ்வாறு நடந்து நலமடைய இறைவன் இன்னருள் செய்ய அவனடி வணங்குவாம். பிழையுள வேல் ஆன்றோர் பொறுக்க.